S. V. சுப்பய்ய பாகவதர்.

உ

வேலுமயிலுந் துணை.

நூதன கிராம்போன்

சங்கீதகீர்த்தனாம்ருதம்

(மூன்றும்பாகம்)

10-இன்ச் D/S. தமிழ் ரிகார்டுகள்.

கிரீன் லேபில்.

சங்கீத வித்வான்

S. V. சுப்பையபாகவதர் பாடியது.

பிளேட் நெ. 2239 சரசராணி கல்யாணி 1-2-பாகம்.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

சரசராணி கல்யாணி
தருணிவாச மிருவேணி சர

அநுபல்லவி.

சுரவினோத கலைவாணி
ஜோதிவாணிலா காய் சொரேமே
சுடும் சுடும் பயந்தரும் இதுததி சர

சரணங்கள்.

அறமினர் துதிசெய் அரசி உன்னை
ஆதரிக்கிறேன் நீ மதிக்கவே
அகம் பொருந்திடும் இது தருணமே சர

மனநிலையது கெட மதம்பெற
மயங்கி நீ எனை விடுவது சரியல்ல
ததியுயர் மனத்த ரொருசுகுமாரி சர

மணமில்லாத வோர் துணை
இல்லாததேன் மகிமைபெருக
உரையென திகழ் சுகாய சர

பிளேட் நெ, 2510 நிச்சயமாய் தீர்க்ககடன் 1-2 பாகம்.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

நிச்சயமாய் தீர்க்கக்கடனுக்குவழி தோன்றவில்லை
நீதானொரு மார்க்கம் சொல்லடி — நிச்ச

அநுபல்லவி.

கச்சைகட்டி ஆடும் — தாசி
இச்சை கொண்டேன் மகா — தோஷி
லஜ்ஜையுற்றேன் ஊரா — ரேசி
மிச்சம் நிந்திப்பா ரா — லோசி — நிச்ச

சரணம்.

பெண்டுபிள்ளையை முன்கால கண்டையருக் கரிச்சந்ரன்
பிரியமாய் விற்றதெதற்கு— அதன்
பின்பவன் பறையனுக் கடிமையாகி யங்குவந்த
பிரேதங்களை சுட்ட தெதற்கு
கொண்ட கடனுக்கு — சத்யம்
குறைவுபடா — ததற்கும்
அண்டினை — னல்லாமல் வேறே
அவனுக் கென்ன — எதற்கும் — நிச்ச

பிளேட் நெ, 2972 { கட்டிக் கரும்பே / சிங்காரி ஒய்யாரி }

இராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டிக் கரும்பே — தேனே
கனியே மோகினி — மானே — க

அநுபல்லவி.

அட்டி செய்வதேன் — அருள்விழியாளே
ஆருயிர் தர்மமதனை — விழியாளே
மட்டிலாத மொரு — மதவிழியாளே, — க

சரணம்.

பாரிலுனை வணங்கிடும் — ததி சுகுமாரி
இனம் பரங்குமிகு — வரத நேரில்
எனதருமை — தெரியாமலே
இனிக்கருணை யுதிக்கும் — தமிழ்பாஸ்கர — க

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சிங்காரி ஒய்யாரி சிங்

அநுபல்லவி.

ஜெகத்தை மயக்கு மிந்த
மூகத்தை படைத்திட்ட சிங்
சேவை தந்திட வந்த
பூவை இங்கித பரிமள சிங்
சீனியுடன் முக்கனி
தேனும் கலந்தமொழி
யாளு மிவளை யினி யானும் தரிசித்திடத் தக்க சிங்
சித்தரு முத்தரு நித்த மதித்திடும்
உத்த மருத்தவ வித்துவ ரின சிங்

சரணம்.

பங்கேருகன் கைதேர்ந்து படைத்திட்ட ராணியாம்
பருவத் திருவுருவில் பாக்கிய கல்யாணியாம்
மங்காத சங்கீதத்தில் மகிமைக்கோர் வேணியாம்
மனதுக்கு நீ யே மயிலான்
கனத்துக் குயிலு மிவளால் இவளை
வஞ்சிக்கும் தென் குடல் பாஸ்கர
சொற்பொரு ளற்புத விற்பனை யாள் சிங்

பிளேட் நே, 2717. நல்வாக்கு நீ கொடடி.

இராகம்-காபி, தாளம்-ஆதி.

நல்வாக்கு நீ கொடடி பெண்ணே!
நல்வாக்கு நீ கொடடி கண்ணே! நல்
நல்வாக்கு நீ கொடடி நான்சிலம்பு விற்றுவாறேன்
பத்தினிப்பெண்ணே! நல்
செல்வாக்குட னிருந்தேன்
தேவடியாள் கடனல் நொந்தேன்
பத்தினிப்பெண்ணே! நல்
தேங்காயுடைந்து விடும்
திருவிளக்கு நின்று விடும்
மாங்காயழுகி விடும்

மல்லிகைப்பூ வாடி விடும்
அம்மம்மா செம்புஜலம் குறையும்
சேர்த்த சந்தண முலரும்
வம்பாய் பெட்டி யுடையும்
வஞ்சியே தெரிந்து கொள்வாய் நல்

வைத்த அடையாளங்கள் மாராமல் தானிருந்தால்
செத்து மடியாமலே நான் திரும்பிவருவேனடி நல்

வைத்த அடையாளங்கள் மாறிவிடில் மாமயிலே
செத்து மடிந்தேனென்று தெரிந்துக்கொள்வாய் மயிலே நல்

திருவருட்பா.

பிளேட் நெ, 3335 வாழையடி வாழை 1-2 பாகம்

புளூ லேபில் ரிக்கார்ட்.

ராகமாலிகா

வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபினில்
யானொருவனன்றோ வகையரியேனிந்த
யேழைபடும்பாடுனக்கு திருவுளச் சம்மதமோ
விதுதகுமோ விதுமுறையோ விது தருமந்தானோ
மாழைமணிப் பொது நடனஞ்செய் வள்ளல் யானுனக்கு
மகனலனோ நீ எனக்கு வாய்த்த தந்தையலையோ
கோழையுல குயிர்த்துயர மினி பொருக்கமாட்டேன்
கொடுத்தருளு நின்னருளொளியைக் கொடுத்தருளிப்பொழுதே.

ஆர்மோனியம்

உரையூர் T. M. காதர்பாக்ஷா

பாடியது.

பிளேட் நெ, 2769 { சூரகுல சம்மாரா
தயவில்லாத தேன்னவஞ்சம்

இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

பல்லவி.

சூரகுல சம்மாரா
ஜெகஜோதி மயில்வீரா சூ

அநுபல்லவி.

உன்னையே நம்பினேன்
என்னையே கண்பாராய் ஞ

சரணம்.

பூமியிலுன்னையே போற்றினே னின்றுளே
தாமத மேதா வேதா நாதா ஞ
சத்துசித் தானந்தா சாயுஜ்ய மோனந்தா
நித்தியானந்த கந்தா நிர்மல ஞானபிரபாத
நீயே நீயே காப்பாயே ஞ

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

தயவில்லாத தென்ன வஞ்சம் இது
தானோ தெய்வ நெஞ்சம் கொஞ்சமும் தய

அநுபல்லவி.

கயிலைநாதனருள் சுதனே என்
கவலை தீரவே மயிலின் மீதிலே
கணந்தனி லிணங்கி வந்தருள் செய தய

சரணம்.

ஆதார முனையன்றி அவனியிலேது
அந்தர மர்மமதை அடியனுக்கோது
சோதனை செய்திடலாமா புகழ்
சுந்தரன் துதி செந்திலம்பதி
துலங்கு மங்களம் பெறுங்குமரனே தய

மிஸஸ் S. R. கமலம் பாடியது.

பிளாக் லேபில் ரிகார்ட்.

பிளேட் நெ, 5587 { காமவலிபாயுதே / சத்தியம் நீர்செய்தால்

இராகம்-அமிர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

காமவலி பாயுதே
கருத்தொடு விதமாகத் தயங்குதே
கருணைசெய்யடி என் மடமானே கா

அநுபல்லவி.

தாமதிக்க லாகுமோ நீ
தயவு செய்யடி மானே
கோமளமே மடமயிலே
கோபமோடி தேனே கா

சரணம்.

கொஞ்சிவரு முன்னே ரஞ்சிதம் பேசவே
சஞ்சலம்தீரடி நெஞ்சது மாறுதே கா

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சத்தியம் நீர்செய்தால் நம்புவேன் இந்த
தையலைப் பிரியே னென்று
மெய்யாக என் முன்னின்று சத்தி

அநுபல்லவி.

உத்தமி பாதகி உமைபரமேசன்
உறுதியாய்ச் சொல்கிறேன் உனக்கு நான் தாசன்
எத்தினமு முனது மேல்விசு வாசன்
இதற்கு ஐயமில்லை என்றுங்கள் நேசன்
சத்தியமாக சொல்லுகிறேன்
சொல்லும்நெறி பிசகிடா
தெனதுள மகிழோடு சத்தி

பிளாக் லேபில் ரிகார்ட்.

P. மாணிக்கம்பிள்ளை பாடியது.

சதாரம் டிராமா.

பிளேட் நெ, 1516 { கண்மணி வாதேனடி / கார்த்தவராயா

இராகம்-இந்துஸ்தானி (நாந்தது) தாளம்-ஆதி.

கண்மணி வாதென்னடி—மாதே
கடுகில்வா நொடியிலே நுழையலாம் செடியிலே க

என்னையுன் வீட்டினில்
கொண்டுபோ என்னமாய்
ஏதோநீ செய்குவாய
ஏழையா னறிகிலேன்
உந்தனை எந்தன் பெண்டாட்டியா
யூரரியச் செய்வேனடி
உறுதிதானோ பிரட்டு
ஏதோ ஓதுவாய் க

ஷை பிளேட்டின் 2-வது பாட்டு.

ஒருத்திக் கொருமகண்டி உன்னைநம்பி வந்தவண்டி
பொருமை பொருத்தவண்டி போகவர யேசாதடி
தில்லா டாங் டாங்கு ராஜா
தில்லா டாங் டாங் தி
பாலப்பழமே அடி பழம் பறிக்குஞ் செண்பகமே-அடி
நீலக் கருங்குயிலே நிக்கட்டுமா போகட்டுமா
நன்னா நானே நானே நன்னா
நன்னா நானே நானே நன்னா
நன்னா நானே நானே ந

சதாரம் டிராமா.

பிளேட் நெ, 5253 { வெள்ளி முளைத்துபோச்சு
அடி அத்திமரமானேன்

திருடன் கண்ணி.

வெள்ளி முளைச்சுபோச்சு
விடியற்காலு மாகி போச்சு—அடி
இடியாப்பக் காரிவந்து
பிடிப்பிடியாய் பிடித்திடுவாள்
தில்லா டாங் டாங் டாங் ராஜா
தில்லா டாங்கு டாங் தி

ஷை பிளேட்டின் 2-வது பாட்டு.

அடி அத்தி மரமானேன்
அத்தனையும் பிஞ்சானேன்—நான்
நத்திவரும் பெண்களுக்கு
மூத்துசரம் நானானேன்

நன்னு நானே நானே நன்னு
நன்னு நானே நானே-அடி நன்னடி
நன்னு நானே நானே (தி)

அடி-அருமை கண்ணே சதாரம்
அறிவேனுன் மனோதாரம்
அணங்கன் விடுங்கணையால்
அங்கம்நோகு திந்தநேரம்
தில்லா டாங் டாங்கு ராஜா
தில்லா டாங் டாங் (தி)

சீவி சினுக்கெடுத்து சித்திரச் சடையுமிட்டு-நீ
முன்னே நடக்கையிலே மாணிக்கத்துக்
கண்ணைப் பறிக்குதடி தில்லா டாங் டாங்கு ராஜா
தில்லா டாங் டாங் (தி)

வைலெட் லேபில் ரிகார்ட்

திருச்செந்தூர். ஷண்முக வடிவு

பாடியது.

பிளேட் நே, 1241 { கந்துகமதக்கரியை
ஐவகையெனும்

தாயுமானவர் பாடல்.

ராகமாலிகா.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொள்ளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்

சலமே நடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரிற் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே.

தாயுமானவர் பாடல்.

ராகமாலிகா.

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநூலையும் வகுத்துச்
சைவமுத லாமளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீயுன்னைநா னணுகவுந்
தன்னருள் வகுக்க விலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவில்
போதபரி பூரண வகண்டிதா காரயாய்ப்
போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

பிளேட் நெ, 1804 { உன்னடியை வழிகண்டு
இன்னமும் சொல்லவோ

இராகம்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னடியை வழிகண்டு
உளம்நொந்து வாடுகின்றேன்
உமாமகேஸ்வரி தனயா

அநுபல்லவி.

பன்னக சயனின் பேரில்
பள்ளிகொண்ட மால் மருகா
என்னாளும் மறவாதிருக்க
எனக்கு வரம் தாமுருகா உ

சரணம்.

அமரரிடரை தீர்த்தவனே
அசுரரழியவே பார்த்தவனே
குமரக்குருபர தேசிகனே
சமராபுரியனே ஷண்முகனே உ

மாயப்பிரபஞ்ச வாழ்க்கையாலே கெட்டேன்
மனம்போன வாராக மாறி நின்னடி தொட்டேன்
தீயவழிகளையே தீனனே நான்விட்டேன்
ஆயன் மருகா முருகா அருள்மொழிக் குட்பட்டேன் உ

ஷி பிளேட் 2-வது பாட்டு

நடராஜர் பதிகம்.

இராகம்-வசந்தா.

இன்னமும் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியும் மந்தமோ கேளாது அந்தமோ
இதுவுனக் கழகு தானோ
என்னென்ன மோகமோ இதுவென்ன சோபமோ
இதுவேவுன் செய்கை தானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவனோ
உன்னைவிட் டெங்கு சென்றாலும் விழலாவனோன்
உனையடுத்துங் கெடுவனோ
ஓஹோ விதுன்குற்ற மென்குற்ற மொன்றுமில்லை
யுற்றுபார் பெற்ற வையா
என்குற்றமாயினும் உன்குற்ற மாயினும்
இனியருளளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

பிளாக் லேபில் ரிகார்ட்.

ராஜா V-M-கோவிந்தசாமி பிள்ளை

பாடியது.

பிளேட் நே, 2207 { அப்பனே சத்தியகீர்த்தி / சுடலையை ஆளும் எந்தன்

அரிச்சந்திரன் விருத்தம்.

இராகம்-முகாரி.

அப்பனே சத்திய கீர்த்தி
அரிச்சந்திரன் நானே கண்டாய்
இப்படி நீயும் வாட
ஏற்குமோ எந்தன் பாலா
தப்பவே நமது மேன்மை
தவமுனி குறியாய் நின்றான்
கப்பியித் துன்ப முன்னைக்
கருதியே வந்திட் டாயோ

அரி-வ-ம்:—அப்பா சத்தியகீர்த்தி! நான்தான் அரிச்சந்திரன் எனக்கிப்பேர்ப்பட்ட கதிவாய்ந்தது! நீயுமித்துயரம் அனுபவிக்கவேண்டி வந்தாயோ என்னுடன் கூட? அப்பா சத்தியகீர்த்தி.

இராகம்-மோகனம்.

சுடலையை யாளு மெந்தன்
சுவாமியி னருட் படிக்கே
கடமையை வாங்க விங்கு
காவல் நானிருக்க நீயும்
திடமுட னுத்தர வின்றி
தீயதை மூட்ட லாளும்
நட நட சீ சீ
நட நட சட் சட்
நட நட சீக்கிரம்
நட நட பிணத்தைத் தூக்கி
நண்ணியுன் பதிக்குத் தானே

சு

அரி-வ-ம்:— ஆஹா மெத்த கெட்டிக்காரி நீ! பேஷ்! இவ்வளவு தைரியமா உனக்கு! சண்டாளி கபடி!

வைலெட் லேபில் ரிகார்ட்.

மிஸ். வனஜாக்ஷி பாடியது.

பிளேட் நெ, 1944 { போனால் வருமோ / சிட்டு பறக்குது பார்

காமிக் பாட்டு.

பல்லவி.

போனால் வருமோ வாலீபம் ஒரு
போதும் வாராதென் ஆக்ஷேபம் போ

அநுபல்லவி.

ஆனலினைதநீ யோசித்துப் பாரு
அப்போது தெரியும் ஒப்பில்லை யாரும் போ

விருத்தம்.

முதிராத வாலீபம் எந்நாளும் வராது
முதிர்ந்து சென்றால்
கதிராக விளையாது கட்டாக விற்காது
கடைத்தெருவே
எதிரில் விலைகொடுத்து கேட்டாலும்
எவரும் கொடார்
தநியான வேளை சந்தோஷித் திருக்க
தக்கநா ளிதுவே. போ

மேற்படி பாட்டு சரணம்.

காய்த்து மரத்திலே தொங்காது ஒரு
கடையிலும் அது விற்காது
எய்த்து பறிக்க முடியாது அதை
எழுதவும் எட்டி லடங்காது போ

காமிக் பாட்டு.

பல்லவி.

சிட்டு பறக்குது பார்
சிறகைத்தட்டி அந்த பறவை யெட்டி சி

அநுபல்லவி.

வெட்டுக்கிளிக் கூட்ட மாக
மேயுததோ கவலை போக — சி

சரணம்.

வண்டுகள் ரீங்காரம் பாட
கொண்டலாத்தி மயில்க ளாட
உண்டு தேனது கூட விண்டு ஓட — சி

வில்லொளியும் தானு மெழ
கல்போன்று மோதி விழ
புல் புல் மைனா குருவி
ஜில் ஜில் லென்றே யருவி
சிவ்வென் றுமே பறந்து
அதோ போகுது இதோ ஏகுது — சி

பிளேட் நெ, 1800 { திருவோற்றியூர் தேருவருகுது
மானா மதுரையிலே

இராகம்-புன்னாகவராளி.

கண்ணிகள்.

திருவொற்றியூரு தேருவருகுது
திரும்பிப் பாரடி கண்ணாட்டி
திரும்பிப் பாரடி தங்கமே
திரும்பிப் பாரடி அம்மாயி
திரும்பிப் பாரடி நீ
திரும்பி சற்றே முகத்தைக் காட்டி
விரும்பிக் கோரடி தங்கமே
விரும்பிக் கோரடி — திரு

தங்கத்தாலே ரோட்டு போட்டு
தண்ணிக்குப் போறவளெ தங்கமே
தண்ணிக்குப் போறவளே கண்ணாட்டி
தண்ணிக்குப் போறவளே அம்மாயி
தண்ணிக்குப் போறவளே அந்த
தங்கக் குடத்தை இரக்கி வைத்து
தயவு செய்யடி கண்ணாட்டி
தயவு செய்யடி — திரு

இராகம்-எதுகுல-காம்போதி.

மாலு மதுரையிலே குட்டி
  மருக்கொழுந்து கூடைக்காரி
ஏனோ எனைக் கண்டதும் தலை
  மேலே மூக்காடு போட்டாய்
ஏராத மலைதனிலே இதோ
  எருது இரண்டு தத்தளிக்க
பாராம லிருக்கலாமா ஐயா
  பழனிமலை வேலவனே கா

கிரீன்லேபில் ரிகார்ட்.

மதுரை. பபூன் ஷண்முகம்

பாடியது.

பிளேட் நெ, 2775 { சுத்தகாரி போடி / ஆசையுன்பேரிலானேன்

காமிக் பாட்டு.

சுத்தகாரி போடி சுந்தரமே நீ
  சொன்னதெல்லாம்
நம்பியிருந்தேன் சுந்தரமே சு

  எப்புக்காரக் குட்டி—என்னை
  எய்க்குராயே குட்டி—உன்னைத்
  தோப்பிலேயு ருட்டி—அடி
சொன்னாலும் கேளேனே—நீ
சொன்ன சொல்லைத் தாளேனே
உன்னாலும் வாழேனே
  மோசமென்று பாரேனே
மூக்கை சிமிட்டாதடி தட்டியே
  மோகமதை யூட்டாதடி
சொல்லி சொல்லி என்னை
ஏமாற்றவோ—குட்டி ஏமாற்றவோ—ராஜா
ஏமாற்றவோ—அம்மா ஏமாற்றவோ—அந்த
  சொக்குபொடி தூவி என்னை

ஏமாற்றவோ — அடி ஏமாற்றவோ — கண்ணே
ஏமாற்றவோ—குட்டி ஏமாற்றவோ
சோலைக்குள்ளே வீடு— அந்த
சோரப் பைய லோடு
ஏளுபணம் நாட்டு மந்த
தக்கவனைத் தேடு—நான்
தாராளக் காரனடி தாரணிக்கு தீரனடி
பாராளும் வீரனடி பாருலகுக் காரனடி
பட்டால்தான் தெரியும்—உங்கள்
வாங்கு எல்லாம்
பாட்டியை கேட்டாலறியும்—ஆசை சு
மச்சானே பேசிடுங்கோ
அச்சப்பட்டு லஜ்ஜை கெட்ட மச்சினிங்கோ
காசுபயல் தந்த கட்டாணத்தான்—என்னை
காணவந்த கோணத்தலே குட்டானத்தான்
கட்டிகொண்டு வந்து விட்டு விட்டு
பெண்ணேபொல்லா கங்காணிபோல வழி கட்டு கட்டு
குட்டிமார்களையும் கூட்டிகிட்டு—உன்னை
குத்தகைக்கு விட்டுப்போனல் வாங்கிக்கிட்டு
கூறுகெட்ட மாமா குணமுடைந்து போமா
நேரம் கெடலாமா நீமெய்விளங்கக்காமா
ஆசை மச்சானே பேசிடுக்கோ—அந்த
அச்சப்பட்டு லஜ்ஜைகெட்ட மச்சினிங்கோ சு

காமிக் பாட்டு.

ஆசையுன்பேரி லானேன்
அப்போதே கெட்டுப் போனேன்
மோசம் செய்யாதே யினிதான்
மோடியேனே விட்டி டேன் ஆ

நேசி நீயுகந் திடுவாய்
ஆசை முத்தம் தந்திடுவாய்
வாசமே புரிந்திடுவாய்
காசியிலே முந்திடுவாய் ஆ

கண்ணே காதலியாளே
பெண்ணே ஆசை ஓயிலாளே
புண்ணானேன் நானு மிவ்வேளே
மண்ணில் பிடி யென் தோளே ஆ

ஓடியே வந்தேனே
தேடியே நொந்தேனே
மோடியேன் செந்தேனே
லேடியெ பொன் தந்தேனே ஆ

காதலியாளே வாராய்
வேதனையை நீ தீராய்
வாதிடாமலே சேராய்
நீ தயங்காமல் பாராய் ஆ

தனிப்பாட்டு.

கோகிலக்கியான

மிஸ். P. S. ரத்தினாபாய் பாடியது

மாமா பாட்டு.

கழுகுழலே குருவிக்குளம் ஏலேலோ மாமா
ஏலேலோ மச்சான் ஏலேலோ சாமி
ஏ மாமா ஏ மச்சான் என் சாமியே நான்
கண்டெடுத்த குண்டுமுத்து
தனனனன லலலலலலலல க

நான் ஜாதியிலும் குறத்தியல்ல ஏலேலோ மாமா
ஏலோலோ மச்சான் ஏலேலோ சாமி
ஏமாமா ஏ மச்சான் என்சாமியே நான்
சங்கரலிங்கம் பேத்தியல்லோ
தனனனன லலலலலலலல க

நான் பிறந்தது பேட்டையூரு ஏலேலோ மாமா
ஏலேலோ மச்சான் ஏலேலோ சாமி
ஏ மாமா ஏ மச்சான் என் சாமியே நான்
வளர்ந்தது வள்ளகாடு வந்தது சென்னை நகர்
வயக்க வங்கநாடு
தனனனன லலலலலலலல க

மூன்றாம்பாகம் முற்றிற்று.